ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1990/5 - 2016 ඔක්තෝබර් මස 24 වැනි සඳුදා - 2016.10.24

1990/5 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: பீஎல்டீஎச்/எல்என்டீ/7/1/6/114
காணி அமைச்சின் இலக்கம்: 4-3/09/2015/டபிள்யூஎச்/26

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் பிரிவு இல. 256 பீ கிரிந்திகல கிராம அலுவலர் பிரிவில் எல்லெவத்த கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட காணி வரைபட இல. 620087 தொகுதி 03 இன் 01 ஆம் தொகுதியின் பத்திரிகை இல. 5 வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட 0.5816 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு.

**1. துண்டு இல. 67**

காணியின் பெயர்: - ; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.1671 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 69**

காணியின் பெயர்:பெங்கியவத்தை அல்லது பஹலகும்பு ரெவத்த; உரிமை கோருபவர்: சுமேத பஸ்நாயக, இல. 93, ஒரேன்ச்ஹில், கல்தொட வீதி, பலாங்கொடை மற்றும் ஏனைய சிலர்; விஸ்தீரணம்: 0.3937 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 71**

காணியின் பெயர்: - ; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0115 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 72**

காணியின் பெயர்: - ; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0058 ஹெக்டயார்.

**5. துண்டு இல. 73**

காணியின் பெயர்: - ; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0035 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலாங்கொடை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப் படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சம்பிக நிரோஸ் தர்மபால,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2016, ஒற்றோபர் 20.

11 - 415

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: எல்எ/227
காணி அமைச்சின் இலக்கம்: 03/ஜே/80/எல்ஜி/773

கதிர்காமம் கிராம வடிவமைப்பு யோசனைத் திட்டத்திற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில் கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவில் கதிர்காமம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள மொனராகலை நில அளவை யாளரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இ. பூ. வ. 25, மேலதிக வரைபடத்தின் இல. 40, பத்திர இல. 94 இல் குறிப்பிடப் பட்டுள்ள காணித் துண்டுகள்.

**1. துண்டு இல. 2064**

காணியின் பெயர்: நிக்ககஹவத்த; உரிமை கோருபவர்: கதிர்காம ஆலய பொறுப்பாளர் மற்றும் மத்தும பட்ட பெந்திகே என்சோஹாமி, அபேசிங்க மத்தும பட்ட பெந்திகே பீட்டர் சில்வா, கதிர்காமம்; விஸ்தீரணம்: 0.313 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 2065**

காணியின் பெயர்: பெபொல்கஹவத்த; உரிமை கோரு பவர்: கதிர்காம ஆலய பொறுப்பாளர் மற்றும் கால்லகே சுமனசேன, கதிர்காமம்; விஸ்தீரணம்: 0.124 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 2066**

காணியின் பெயர்: தேக்கவத்த; உரிமை கோருபவர்: கதிர்காம ஆலய பொறுப்பாளர் மற்றும் பம்பரெந்த குருகே மென்டிஸ் அப்பு மற்றும் பம்பரெந்த குருகே விஜயபால, கதிர்காமம்; விஸ்தீரணம்: 0.149 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக் கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கதிர்காமம் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப் படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். சீ. வீரகோன்,
பிரதேச செயலாளர்,
கதிர்காமம்.

பிரதேச செயலகம்,
கதிர்காமம்,
2016, ஒற்றோபர் 19.

11 - 416